# "என் பெயர் ஜிப்சி" கவிதையில் பண்பாட்டு நிலவியல் சூழல்

***ப. கவிப்பிரியா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோவை
https://doi.org/10.5281/zenodo.14383160

***ஆய்வுச் சுருக்கம்***

*பண்பாடு என்பது அனுபவங்களின் சேர்மம் என்று மானுடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார். அத்தகைய அனுபவங்களின் முயற்சியே மனித குலத்தினை அடுத்தடுத்தகட்ட நகர்வை நோக்கி இழுத்துச் சென்றிருக்கிறது. சங்க இலக்கியத்தின் முதற்பொருளாகச் சுட்டப்படும் நிலம், பண்பாட்டுக் கட்டமைப்பிற்கான அடித்தளம். இதனை உணர்ந்தே அறிஞர் சமூகம், நில அமைப்பினையும் பண்பாட்டுக் கூறுகளையும் ஒருங்கிணைத்து நிலவியல் பண்பாடு என்ற ஆய்வினை தொடங்கியது. மானுடவியல், சமூகவியல், சூழலியல், பண்பாட்டியல், இனவரைவியல் என எல்லா இலக்கிய ஆய்வுத் துறைகளுக்கும் பொதுவான ஒரு கூறு பண்பாட்டு நிலவியல் ஆகும். மனித சமுதாய வளர்ச்சிப் போக்கை உலகம் தோன்றிய நாள் முதலாக இன்றுவரை ஆய்வுமேற்கொண்டு தெளிவுபெற, மனிதன் தோன்றிய,தோற்றுவித்த நிலவியல் சூழல்களையும் அச்சூழல்களால் உருவான பண்பாட்டுப் பரிணாமங்களையும் நுணுகி ஆராய்தல் அவசியமாகிறது. அவ்வகையில் சூழலியல் ஆர்வலரான நக்கீரன் அவர்களின் பல்வேறு படைப்புகளில் என் பெயர் ஜிப்சி என்ற கவிதையாக்கப் படைப்பு, ஆய்வுலகத்தால், மனித சமூகத்தால் இதுவரை இனங்காணப்படாத பல்வேறு நிலவியல்சூழல் சார்ந்த பண்பாட்டினையும் சொல்லாக வடித்து காட்சிப்படுத்துகிறது. அவற்றுள் சில கவிதைகளை பண்பாட்டு நிலவியலின் அடிப்படையில் ஆய்ந்து பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

## முன்னுரை

*மனிதகுல வரலாற்றில் பழமையை இனங்காண்பதும் பழமைப்பாலம் மூலமாக புதுமையைக் கண்டடைதலும் இன்றைய மானுடச்சமூகத் தேவையாக உள்ளது. மனித குலத்தின் பல்வேறு சமூகப் பண்பாட்டுக் கூறுகளை ஆராயும் இயல் மானுடவியல் ஆகும். அதற்கு தமிழ்நிலத்தின் மரபைக் கூறும் இலக்கியங்களின் துணை தேவையாகிறது. மானிட சமூகமானது பல்வேறு இனக் குழுக்களாகப் பிரிந்து பல்வேறு பண்பாட்டின் பல்வேறு கூறுகளை மானுடவியல் ஆய்வு செய்கிறது. இவ்வாய்வின் அடிப்படையில் நாம் காணும் மிக முக்கியக்கூறு நிலவியல் பண்பாடு அல்லது பண்பாட்டு நிலவியல் என்பதாகும். இதனைச் சூழலியல் அமைப்போடும் பொருத்திக் காணலாம்.*

## நிலவியல் பண்பாடு

*நிலவியல் பண்பாடு என்ற சொல் ஆய்வுக்குரியது. நமது புவியின் நில அமைப்புகளை பண்பாட்டு நோக்கில் உற்று நோக்குவது நிலவியல் பண்பாடு எனப்படுகிறது. முதலாவதாக பண்பாடு என்று சொல் நேரடியாகப் பண்படுத்துதலை குறிக்கும். பக்குவப்படுத்துதல் அல்லது பதப்படுத்துதல் என்றும் கூறலாம். பொதுவாக பண்பாடு என்பது இயற்கைக்கு மாறானது என்று கூறுவதே பொருத்தம். உதாரணமாக ஆடையின்றி ஒரு மனிதன் பிறத்தல் இயற்கை அதைவிடுத்து நாகரீகமாக உடை அணிந்து நிர்வாணத்தை (உடலை) மறைப்பது பண்பாடாகிறது. இப்படி மனித சமூகம் ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னுடைய பழக்க வழக்கங்கள் மூலம் ஒரு*

பண்பாட்டை உருவாக்கியுள்ளது. இருப்பினும் நில அமைப்பியல் சார்ந்த பண்பாட்டினை இரு கூறுகளாக பிரிக்கலாம். முதலாவது, நிலவியல் மீதான பண்பாட்டு கூறுகள். இரண்டாவது, நிலவியல் வழியிலான பண்பாட்டுக் கூறுகள். முதல் வகை பண்பாட்டுக் கூறானது மனிதன் நிலஅமைப்புகளில் ஏற்படுத்திய தாக்கம். இரண்டாவது வகை பண்பாட்டுக் கூறு என்பது நிலவியலும் சுற்றுச்சூழலும் மனிதன்மீது ஏற்படுத்திய தாக்கம். இவ்வாறு நிலவியல் பண்பாடு என்பது மனித சமூகத்தின் வரலாற்றை, மனித இன வளர்ச்சியின் காலவெளியை எடுத்துரைப்பதாகவுள்ளது. தமிழகத்தின் நிலவியல் சூழல் என்பது தொடக்க காலத்தில் தாய்வழிச்சமூகமாக இருந்து பின்பு இனக்குழுச்சமூகமாக மாறி பண்பட்ட வேளாண் சமூகமாக உருவெடுத்து இன்று இயந்திரமயமாக்கப்பட்ட சமூகமாக பரிணமித்துள்ளது. உதாரணமாக ஆ என்ற பசுக்கள், இனக்குழுச்சமூகத்தில் குறிப்பாக முல்லைத்திணையின் செல்வமாக (Asset) அறியப்பெற்றது. மாடுகளை வளர்த்தலும் அவற்றைக் காவல்காத்துப் பராமரிப்பதும் முல்லைத்திணையின் வாழ்வாக அமைந்தது. வேளாண்சமூகத்தில் அவை உழவுக்குப் பயன்படும் உதவியாளர்களாகப் (Helpers) பரிணமித்தன. அதே காலகட்டத்தில் வேள்விப்பொருளாகவும் உபயோகப்படுத்தப்பட்டன. இன்றைய இயந்திரமயமான சூழலில் அவை அழிவின் விளிம்பில் உள்ளன. இது மாடுகள் என்ற ஒருவகை உயிரினத்தின் வாழ்வியலில் நிலவியல் பண்பாட்டின் தாக்கத்தினால் நிகழ்ந்த ஒரு மாற்றம். இது புவியிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் உயிரிகளுக்கும் பொருந்தும்.

## சூழலியல் எழுத்தாளர் நக்கீரன்

"என் பெயர் ஜிப்சி" என்ற கவிதைப் படைப்புக்குச் சொந்தக்காரர் நக்கீரன் அவர்கள். நவீன இலக்கிய உலகில் இவர், தன்னை ஒரு தனித்துவமான சூழலியல் எழுத்தாளராக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். அலையாத்திக் காடு, இயற்கை 24✻7, உயிரைக் குடிக்கும் புட்டிநீர் கண்ணுக்குத் தெரியாமல் களவு போகும் நீர், எறும்புகள் ஆறு கால் மனிதர்கள், காடோடி, கார்ப்பரேட் கோடரி, சூழலும் சாதியும், தமிழ் ஒரு சூழலியல் மொழி, பசுமைப்பள்ளி மழைக்காடுகளின் மரணம், வண்ணத்துப்பூச்சிகளின் விடுதி என்ற பல்வேறு இயற்கைச்சூழல் சார்ந்த படைப்புகளில் இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் மனித சமுதாயம் கட்டமைக்க மறந்த நிலச்சூழலை, இயற்கைப் பராமரிப்பை சூழலியல் ஆர்வலராக தன் எழுத்துக்களின் மூலம் அடையாளப்படுத்தி வருகிறார். சூழலியல் எழுத்தாளரான நக்கீரன் தமிழ் பண்பாட்டுச்சூழலைப் பல்வேறு கோணங்களில் எதார்த்தமாக எழுதியவர். அவரது கவிதைப் படைப்பான என் பெயர் ஜிப்சி என்ற கவிதை நூலில் இடம் பெறும் பெரும்பாலான கவிதைகளும் பல்வேறு நிலவியல் பண்பாட்டுக் கூறுகளின் மேல் கட்டமைக்கப்பட்ட கருத்துகளை முன்வைத்து எழுதப்பட்டது. இந்நூல் 2012 ஆம் ஆண்டின் சிறந்த கவிதை நூலுக்கான ஆனந்த விகடன் விருது பெற்ற பெருமைக்கு உரியது.

**வானமே கூரை**
**திசைகளே சுவர்கள்**
**புவியே பாடநூல்**
**தாவரங்களும் விலங்குகளும் இயற்கையும்**
**இப்பள்ளியின் ஆசிரியர்கள்**

என்ற வரிகளே நக்கீரன் அவர்களின் படைப்புநோக்கத்தை எடுத்தியம்பும்.

## அறிவியல்வழி நிலவியல் பண்பாடு

என் பெயர் ஜிப்சி கவிதையில் இடம்பெறும் முதல் கவிதை யுரேகா குளம்.

**ஆர்க்கிமிடிசின் தொட்டியில்**
**ஐன்ஸ்டீன் அமிழ்கிறான்**
**வெளியேறிய நீரின் எடை**
**நாகசாகிக்குச் சமமாக இல்லை**
**இருப்பினும் ஒரு நீலநிற முண்டாசுக்காரன்**
**யுரேகா யுரேகா என்று**
**கத்திக்கொண்டு கூடங்குளம் தெருக்களில்**
**ஓடிக்கொண்டிருந்தான்**

அறிவியல் உலகம் மனித குலத்திற்குக் கொடுத்த கண்டுபிடிப்புகள் அனைத்தும்

*நன்மையே என்று சொல்வதற்கிடமில்லை. விஞ்ஞானிகளால் லட்சியமாக்கப்பட்ட அணுவாயுத ஆய்வுகள் ஜப்பானின் நகரமான நாகசாகி தொடங்கித் தமிழகத்தின் கூடங்குளம் வரைக்கும் மக்களையும் சுற்றுப்புறச்சூழலையும் பாதித்து பல கேடுகளைக் காலங்காலமாக நிகழ்த்தி வருவதை இக்கவிதையால் உணரமுடிகிறது. அதுமட்டுமில்லாமல் முடிவில்லாப் போராட்டமாக நிகழ்ந்துவரும் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் ஆபத்து அப்பகுதியைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவருகிறது என்பதையும் நினைத்துப் பார்க்கத் தூண்டுகிறது இக்கவிதை.*

**வாழ்வியல் பண்பாட்டுச் சூழல்**

*மனிதனுக்கு அடிப்படைத் தேவை உணவு, உடை, உறைவிடம். மூன்றில் ஒன்று குறைவுபட்டாலும் அவன் ஏழையாகிறான். மூன்றுமே கிடைக்காமல் போனால் ஒருமனிதன் சமூகத்திடம் யாசிக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரனாகிறான். உணவும் உடையும் இன்றிப் போனாலும்கூட ஒரு மனிதனுக்கு உறைவிடம் இருந்தால் தானாகவே சமூகத்திடமிருந்து மீதி இரண்டையும் பெற முயலலாம். இக்கருத்தாக்கத்தின் உயிர்ப்பினை யாசிக்கும் கரங்கள் வேண்டுவன யாவை என்னும் தலைப்பிலான கவிதையில்,*

***யாசிக்கும் கரங்கள் வேண்டுவன யாவை***
***சில்லறைகள் என்பது உங்கள் கருத்து***
***குழிந்த அக்கரங்களுக்குள் கூர்ந்து***
***கவனித்தால் காணலாம்***
***அமைதி தவழும் ஓர் இல்லம்***
***அழகிய ஆடை அணிந்த மனிதர்கள்....***

*என்பதாக நீள்கிறது இக்கவிதை. மேலும், இருப்பிடமின்றியும் ஆடையின்றியும் வாழ்ந்த ஆதிமனிதன், பண்பாட்டு வளர்ச்சியாலேயே தன்னுடைய அடிப்படையாக அவற்றை மாற்றிக்கொண்டான். பல மனிதர்களுக்கு இன்றுவரை அத்தகைய அடிப்படைகள் கூட எட்டாத கனியாக இருக்கிறது எனும் எதார்த்த வாழ்வியலையும் இக்கவிதை எடுத்துக்காட்டுகிறது.*

**சமயப் பண்பாட்டுச் சூழலியல்**

*தமிழை உலகந்தோறும் பக்திமொழியாகக் கொண்டாடக் காரணம் சைவ, வைணவ சமயங்களின் பக்திச்சிறப்பால் உருவான இலக்கியங்களே என்கிறது இலக்கிய வரலாறு. ஆயினும், சமணம், பௌத்தம் போன்ற புறச்சமயங்களின் செல்வாக்கைச் சமயப்போரால் தகர்த்தமையும் வெற்றிக்கான மற்றுமொரு காரணமாகிறது. இச்செயல்பாடுகளை வெறும் சமயம், மொழி என்ற பார்வையோடு நிறுத்தாமல் அக்காலச் சூழலில் தமிழகத்தின்மீது உருவாக்கப்பட்ட பண்பாட்டு ஊடாட்டத்திற்கான தடுப்பணைகளே இந்த சமயப்போர்கள் என்றே கூறவேண்டும். நாடோடிகளாய் ஊர்வெளியில், ஒதுக்குப்புறங்களில், குகைகளில் வாழ்ந்துதிரிந்த சமணர்களாகிய முனிவர்களின் இருப்பியலை அழித்தமையை ஆதிகாலச் சமூகப் பண்பாட்டைத் தகர்த்தெறிந்த ஒடுக்கச் செயல்பாடாகவே இந்த சைவ, வைணவ சமயங்கள் செலுத்திய ஆதிக்கத்தைப் பார்க்க வேண்டியுள்ளது. இதனை,*

***நூற்றாண்டுகள் கடந்ததொரு பகலில்***
***மீண்டும் வருகிறான் சமண முனி***
***தாமரைத் தடாகத்துள் விட்டுச்சென்ற***
***சித்திர மங்கையைத் தேடி வந்தவனின்***
***திகம்பரக்கோலம் கண்டு***
***கற்படுக்கைச் சென்று காலை வரை***
***குப்புறப்படுத்துக் கொள்கிறான்***
***சுற்றுலா வந்த சிறுவன் ஒருவன்***
***சகமாணவனைச் ‘ சம்பந்தர்’ என அழைக்க***
***அலறியெழுந்து தலைதெறிக்க ஓடிய அம்முனி***
***இதுவரை திரும்பாததால்***
***மேலும் மேலும் வற்றிக் கொண்டே***
***இருக்கிறது ஆழத்தில் மீன்கள் துள்ளும்***
***அமண மங்கையின்தடாகம்***

*என்று சித்தன்னவாசல் எனும் தலைப்பிலான கவிதையில் கடந்தகால சமயப் பண்பாட்டுச் சூழலை எடுத்துரைக்கிறார்.*

**பொருள்சார் பண்பாட்டுச் சூழல்**

*வருத்தப்படாமல் பாரம் சுமப்பவர்களே வாருங்கள் என்ற கவிதை நிலம் சார்ந்து மனிதர்கள் அழித்த பொருள்சார்ந்த பண்பாட்டின் நிலவியலை முன்வைத்து எழுதப்பட்டிருக்கிறது. இறைவனாகிய இயற்கை, மனித சமூகம் விளைத்த அழிவுகளுக்கெல்லாம் வருங்காலத்தில்*

*விடையளிக்கும் என்பதையும் கவிதைவரிகள் புலப்படுத்துகின்றன.*

***பாலை நில மக்களின் குருதியிலோடும்***
***உங்கள் வாகனத்தை சற்று நிறுத்துங்கள்***
***புட்டி நீர் வியாபாரியிடம் வாங்கிய***
***புவியின் சேமிப்பை அருந்தி***
***இளைப்பாற்றிக் கொள்ளுங்கள்***
***உங்கள் பருத்தியாடையிலிருந்து***
***வீசும் பிணங்களின் துர்நாற்றத்தைச்***
***சகித்துக்கொண்டு கேட்கிறேன்***
***மரபீனி மாற்றத் தானியங்களால் சமைக்கப்பட்ட***
***மலட்டு அப்பங்களைப் புசிக்க தொடங்கியிருப்பவர்களே.....***

*என்றமைகிறது கவிதை.*

**இணையப் பண்பாட்டுச் சூழல்**

*டினோசர் என்கிற பூதப்பல்லியின் பசி கவிதையில்ஆங்கிலப் படமான 'ஜுமாஞ்சி' யில் வருவதைப்போல அழிக்கப்பட்ட இனமான டினோசர் இன்றைய இணைய யுகத்தில் இருந்திருந்தால் அதன்நிலை இன்னும் மிகமோசமாக இருந்திருக்கும் என்பதாக ஆறுதல்படுத்துகிறது. சில உயிரினங்கள் பூமியில் அழிக்கப்படுவதும் கூட காலத்தின் நியதியே என்பதை நுட்பமாகச் சொல்லிச் செல்கிறது. இதனை,*

***கலைக்களஞ்சியத்திலிருந்து குதித்த பூதப்பல்லியொன்று***
***அவனுடன் சற்றுத் தங்கிச் செல்வதாகச் சொன்னது***
***முதலில் நாளிகைகளை வாசித்த அது***
***பிறகு தொலைக்காட்சியை முடுக்கிப் பார்த்தது***
***வெகு நேரம் இணையத்தில் மேய்ந்து விட்டு***
***தனக்கின்னும் பசிப்பதாகச் சொன்னபோது***
***தன் உணர்வைப் பகிர முன்வந்தான் அவன்***
***'முட்டாள்' என்று சீறிய பூதப்பல்லி***
***தனக்கான உணவைத் தானே உண்டு முடித்து***
***மீண்டும் கலைக்களஞ்சியத்தினுள் புகுந்து கொண்டது***

*என்கிறார் கவிஞர்.*

**பண்பாட்டு நிலவியலில் போர்ச்சூழல்**

*அடுத்த கவிதையில் அகதிகளின் அவல வாழ்வையும் தாம்பிறந்து வளர்ந்த இடத்தை விட்டு அடையாளம் இழந்து தவிக்கும் மக்களின் நிலவியல் சார் சூழலியல் போராட்டத்தை,*

***அகதி முகாமில் ஒரு சிறுமி***
***சிறிய எண்ணில் இருந்து பெரிய எண்ணை***
***விரல்விட்டுக் கழித்துக் கொண்டிருக்கிறாள்***
***தப்புத் தப்பாகவே வருகிறது விடை (தலைப்பு: தீடையைச் சுற்றும் ஆலாக்கள்)***

*என்ற வரிகள் முன்வைக்கின்றன. இங்கு தப்புத் தப்பாகவே வருகிறது விடை என்னும் வரிகள் எல்லைப்போர்களால் அகதிகளாய் நாடிழந்துத் தவிக்கும் மக்களின் வாழ்க்கை, தடம் மாறிப்போகும் நிலையைக் குறிக்கும் வரிகளாகும்.*

*மேலும், போர் என்பது எல்லாக் காலங்களிலும் மனிதசமுகத்திற்கு அழிவையே தந்துள்ளது. ரஷ்யா உக்ரைன், இஸ்ரேல் பாலஸ்தீனம் போன்ற நாடுகளிடையேயான போர்கள் இன்றைக்கும் அந்நாடுகளை மட்டுமல்லாமல் உலகத்தையே பேரழிவை நோக்கி இட்டுச் செல்வது கண்கூடு. மண்ணாசையால் உருவாக்கப்பட்ட போர் இன்று மாபெரும் மனித சமுதாயத்தின் அழிவுக்கான பாதையாக அனைவரையும் அச்சுறுத்தி வருகிறது. அத்தகையானதொரு போர் சார்ந்த நிலவியல்சூழலை என் பெயர் தீவிரவாதி என்ற கவிதை உணர்த்துகிறது.*

***காஷ்மீரமோ***
***ஏழு சகோதரிகளின் இல்லமோ***
***அல்லது சிவப்பு பிரகாரமோ***
***எந்த இடம் என்பதெல்லாம் முக்கியமில்லை***
***நான் உறங்கிக் கொண்டிருந்தேன்***
***துப்பாக்கிகள் சுடும் ஓசை கேட்டது***
***யாரோ ஓடுகிறார்***
***யார் யாரோ துரத்துகிறார்கள்***
***எழுந்து ஜன்னலைத் திறக்கிறேன்***
***ஒழுகிய குருதியின் தடம் தவிர***
***ஒருவரையும் காணோம்***
***ஜன்னலை மூடிப் படுக்கிறேன்***
***உறக்கம் வரவில்லை***
***மீண்டும் கேட்கிறது துப்பாக்கிகளின் ஓசை***
***யாரோ ஒருவர் ஓடிவருகிறார்***
***துரத்தப்பட்டவரின் மீது கருணை கொண்டு***
***என் இதயத்தின் ஓர் அறையை***
***அவருக்குப் பதுங்கத் தருகிறேன்***
***காலையில் ராணுவம் கதவைத் தட்டுகிறது***
***இனி என் பெயருக்கு மதமில்லை***
***இனி என் பெயருக்கு இனமில்லை***

***இனி என் பெயருக்கு மொழியுமில்லை***
***உலகமயமாக்கப்பட்டுவிட்ட என் புதிய பெயரை***
***இன்றைய செய்திகளில் பாருங்கள்***

*என்று மனிதநேயமற்ற போர்ச்சூழலைப் சொற்காட்சியாக்குகிறார் நக்கீரன்.*

**நவீன முல்லைத்திணைப் பண்பாடு**

*திணைச்சூழலை முன்வைத்து எழுதப்பட்ட ஒரு கவிதை இன்றைக்குத் தலைவி. சங்கப் புலவர்கள் கூறிய முல்லைத் திணைக்குரிய தலைவி என்பவள் பொருளீட்டச் சென்ற தலைவனுக்காகவோ அல்லது போரிடச் சென்றதலைவனுக்காகவோ ஆற்றாமையால் காத்திருந்து தன் வாழ்நாளைக் கழிப்பாள். அத்தகைய முல்லைத் திணையில் சங்கப் புலவர்கள் சித்தரிக்கும் ஆற்றாமைத் தலைவிகளை நினைவுறுத்தி அதே தலைவிகள் இன்றைய நவீனயுகத்தில் தலைவனுக்காகக் காத்திருக்கும் நிலையில் அவள் மனநிலை எப்படியிருக்கும் என்பதை,*

***வானில் இருந்து பூமிக்கு நடந்த***
***நீர்த்துளிகளை***
***இரு கைகளை நீட்டித்***
***தடுத்திருக்க வேண்டாம்***
***தேங்கிய கண்ணாடிக்குள்***
***ஒரு சிதைந்த பிம்பம்***
***மற்றும் இறந்து மிதந்த***
***ஓர் இணை மீன்கள்***
***பீர்க்கம்பூக்களை என்றோ***
***மேனி உதிர்த்துவிட்டது***
***கூந்தலில் சூட்டப்பட்டுவிட்ட இம்***
***முல்லையின் மணம் தான் இக்***
***கார் காலத்தை நிறைக்கிறது***
***ஒரு துளிக்கும் மறு துளிக்கும் இடையே***
***நனையாமல் நடக்கும் வித்தை***
***கைகூடி விட்ட மனசு***
***கண்ணாடியை உடைக்கிறது***
***வீழ்ந்த பெயல்நீரில்***

*என்றவாறு முல்லைத்திணையின் நவீனச் சூழலைப் படம்பிடித்துக் காட்டுகிறது இக்கவிதை. சூழலிய அழிவில் ஜெலுத்தோங்கும் இருவாச்சியும் மனிதகுலம் ஆதிகாலந்தொட்டே ஒரு பொருளையோ ஒரு கருவியோ உருவாக்க மற்றவற்றை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வரிசையில் பியானோ இசைக்காத இசை என்னும்கவிதைபியானோவடிவமைப்பிற்காக அழிக்கப்பட்ட ஜெலுத்தோங் எனும் ஒரு மரவகை பற்றியும் அதனூடே அழிக்கப்பட்ட இருவாச்சிகள் எனப்படும் ஒரு பறவையினத்தைப் பற்றியும் பேசுகிறது.*

***ஒரு மாபெரும் இசைக் கலைஞன்***
***பியானோவை இசைத்துக் கொண்டிருக்கிறான்***
***பியானோவின் தாழக்கட்டைகள் குறித்து***
***நன்கறிவேன்***
***அதனைச் செய்வதற்காக வெட்டப்பட்ட***
***ஒரு ஜெலுத்தோங் மரத்தையும் அறிவேன்***
***அது வெட்டப்படுவதற்கு சற்று முன்னர் வரை***
***அதன் உச்சியில் கூடுகட்டியிருந்த***
***இருவாச்சிப் பறவைகளையும் அறிவேன்***
***அறியாதது***
***அம்மரம் வெட்டி வீழ்த்தப்பட்டவுடன்***
***காற்றையே கனக்கச் செய்த***
***இருவாச்சிகளின் அந்த அடர் சோகக்கூவலை***
***இந்தப் பியானோவில்***
***இந்த மாபெரும் இசைக் கலைஞன்***
***இறுதி வரை ஏன் இசைக்கவில்லை***

*என்ற வினாவை முன்வைக்கிறது இக்கவிதை. பகல் நேரங்களில் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தெடுக்கும் நகரத்தினுடைய சூழலும் அமைப்பும் இரவுநேரங்களில் அதற்கு எதிர்மாறாக பயமுறுத்துவதை சதுக்கப்பூத வருகை என்னும் கவிதை முன்வைத்துப் பேசுகிறது. அதேபோல, ஒட்டுமொத்த இந்தியாவின் நிலவியலையும் தமிழ்மொழிச்சூழலையும் தமிழ்க்கவிஞர் எனும் தலைப்பிட்ட கவிதையில் பேசுகிறார், நக்கீரன் அவர்கள்.*

*ஒரு கவிஞர் இந்தியாவின் ஆகத் தென் முனையில் நின்று கொண்டிருக்கிறார். அந்த விளிம்பில் கயிற்றின் மேல் நடக்கும் களைக்கூத்தாடியைப் போலவே இருகரங்களையும் பக்கவாட்டில் நீட்டிச் சமன் செய்தபடி மிக எச்சரிக்கையோடு நின்று கொண்டிருக்கிறார். அவர் அப்படியே குப்புற இந்தியப் பெருங்கடலுள் விழுந்தால் தெற்கு நோக்கி சரிந்து கொண்டே போய் அவரது தலை அண்டார்டிகாவின் பனிப்பாறையில் மோதித் தெறித்துவிடும். மொழியற்ற பகுதியில் அவரின் சொற்கள்*

*பொருளற்றுச் சிதறிக் கிடக்கும் ஒரு கவிஞருக்கு அதைவிட வாதை வேறில்லை. அவரது வலக்கரம் சற்று தாழ்ந்து அரபிக்கடலுள் சாய்ந்தால் கடித்துத் தின்ன மேற்கத்திய இசமீன்கள் காத்திருக்கின்றன. இடக்கரம் தாழ்ந்து வங்காள விரிவுடாவுக்குள் வீழ்ந்தால் கீழைத் தத்துவங்கள் வாய்பிளந்து கொண்டிருக்கின்றன. கவிஞர் கவனமுடன் தான் நின்று கொண்டிருக்கிறார். அப்படியும் ஒருவேளை அவர் மல்லாக்க விழ நேரிட்டால் ஈராயிரம் ஆண்டு காலச்சேற்றின் ஏதோ ஒரு பகுதிக்குள் அமிழ்ந்துபோவது உறுதி. என்னதான் கவிஞர் எச்சரிக்கையாய் நின்றாலும் கூட இதோ ஒரு கரம் அவரைத் தள்ளிவிட நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாம் நம் எழுதுகோல்களைக் கூர்தீட்டி சவப்பரிசோதனைக்கு அணியமாவோம் தமிழ்க்கவிஞர் அல்லவா அவர் என்றவாறமைகிறது கவிதை.*

**முடிவுரை**

*பொதுவாக நவீனக்கவிதைகள் மனிதனின் உள்ளுணர்வுகளையே பதிவுசெய்து வருகின்றன. ஆனால், நக்கீரன் அவர்களின் கவிதைகளில் பலவும் நிலம் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளாகவே உள்ளன. நக்கீரன் அவர்கள் சுற்றுச்சூழல்மீது அதீத அக்கறை கொண்ட ஆர்வலர், குறிப்பாகத் தமிழ்நிலத்தை ஒட்டியும் தமிழ்நிலத்தின்மீதும் காலங்காலமாக நிகழ்த்தப்படும் பண்பாட்டுத் தாக்கங்களையும் அவை மக்கள் வாழ்வியலில் ஏற்படுத்தும் வளர்ச்சி வீழ்ச்சிகளையும் கவிதைகள் வழியாக எடுத்துரைக்கிறார். இவரைப் போலவே பண்பாட்டு நிலவியலை வளர்த்தெடுக்கும் எழுத்துகள் உருவாவது இன்றைய சூழலில் காலத்தேவையாக உள்ளது.*

**துணை நின்ற நூல்கள்**


1. *என் பெயர் ஜிப்சி, நக்கீரன், காடோடிபதிப்பகம், திருவாரூர்.*
2. *இலக்கிய மானுடவியல் (தமிழ்ச்சமூகத்தின் செல்நெறிகள் மீதான பண்பாட்டியல் பார்வை), பக்தவத்சலபாரதி, அடையாளம் பதிப்பகம், திருச்சி.*
3. *சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலும், ஆ.தனஞ்செயன், நியூ சென்ட்சுரி புத்தக நிலையம், சென்னை.*